# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1708/1 - 2011 මැයි 30 වැනි සඳුදා - 2011.05.30

*1708/1 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2008 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

*3(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(2)ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கைத்தொழில் மற்றும் வர்த்தக விடயங்களுக்குப் பொறுப்புச்சாட்டப்பட்ட அமைச்சருடன் கலந்துரையாடி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், பசில் ரோஹன ராஜபக்ஷ ஆகிய நான், இந்த அறிவிப்பின் மூலம் -*

*1. வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம், அமெரிக்க டொலர் எண்பது மில்லியன் (US$80m) முதலீட்டொன்றுடன் அதிநவீன தொழில்நுட்பத்துடன் தற்காலத்துக்கு ஏற்ற உருக்குத் தொழிற்சாலையொன்றை அமைப்பதையும் அத்துடன் தற்போது அத்துறுகிரியவில் உள்ள தொழிற்சாலையில் எக்கு கம்பிகள் மற்றும் ஏனைய உருட்டு உற்பத்திகள், மற்றும் கீறல் வரிசையொன்றை அமைத்தல், ஜீஐ குழாய் மற்றும் குழாய் உற்பத்தி ஆலை, இரும்பில் மேற்பூச்சிடல் இயந்திரத் தொகுதி, கம்பி இழுத்தல் மற்றும் கம்பி வலை உற்பத்தி, கம்பி ஆணி உற்பத்தி இயந்திரத் தொகுதி, உருக்கு வார்ப்பு உற்பத்திப் பொருட்களுக்கான இயந்திரத் தொகுதி, தட்டுக்களை மடிப்புக்களாக உருட்டும் இயந்திரத் தொகுதி, உருக்குக் கட்டமைப்பு உற்பத்தி அலகு ஆகியவற்றின் உற்பத்திக்காக அதன் கொள்ளளவை மேம்படுத்துவதையும் மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றென இனங்காண்பதற்காக மேலும், அந்நியச் செலாவணிச் சேமிப்புடன் தேசிய பொருளாதாரத்துக்கான பங்களிப்பை வழங்கும் இறக்குமதி மாற்றுப் பொருள் கைத்தொழிலாகவும் முக்கியமானதொரு துறையில் உள்நாட்டுப் பொருளாதாரத்துக்கு ஒரு உந்துதலை அளிப்பதாகவும் இக்கருத்திட்டம் இனங்காணப்பட்டுள்ளது.*

*2. இலங்கை முதலீட்டுச் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட திகதியை மேற்குறிப்பிட்டவாறான விசாலிப்பு அலகின் ஆரம்பத் திகதியாகப் பிரகடனப்படுத்துவதற்காக அத்துடன்,*

*3. மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி தரப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக இக்கருத்திட்டக் கம்பனிக்கு விலக்களிப்புக்கள் ஏற்புடைத்தாகும் எனக் குறிப்பிடுவதற்காகவும்,*

*(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசிய இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள்*

*கம்பனி வரி விதிப்புக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த இரண்டு (02) வருடங்களின் பின்னால், அவற்றுள் எது முந்தி வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் பத்து (10) ஆண்டுகளுக்குத் தேசிய இறைவரிச் சட்டத்தின் கீழான வரி விலக்களிப்புக் காலப்பகுதியொன்று, அதன் பிறகு, பத்து வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடையும் கடைசித் திகதியை உடனடுத்து வரும் மேலுமொரு ஐந்து (5) வருடங்களுக்கு ஒவ்வொரு*

**கவனிக்க.**- *1707/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1707/24 ஆகும்.*

மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அக்காலப்பகுதியில் ஏற்புடைத்தான வரி வீதங்களின் அரைவாசிக்குச் சமமானதாக அரைவாசி விலக்களிப்பு வழங்கப்படும். ஐயப்பாட்டைத் தவிர்ப்பதற்காக, மேலே குறிக்கப்பட்டவாறான (15) வருடங்கள் முடிவடைவதைத் தொடர்ந்து கருத்திட்டம் தொடர்பில் அக்காலத்தில் அமுலில் இருக்கும் பொதுவான வரிச்சட்டகம் ஏற்புடைத்தாகும்.

ஆயினும், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் 0.25% வீதத்தில் பொருளாதார சேவைகள் விதிப்பனவு ஏற்புடைத்தாகும்.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம்

கருத்திட்டக் கம்பனியும் முதலீட்டுச் சபையும் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தைக் கைச்சாத்திட்ட திகதியில் இருந்து சபையின் அனுமதியுடன் கருத்திட்டத்தை அமுலாக்கும் ஐந்து (5) வருடக் காலப்பகுதியொன்றின் போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்களின் மற்றும் கட்டிடப் பொருட்களின் இறக்குமதி மீதான சேர்பெறுமதி வரி செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்படும்.

(இ) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்

கருத்திட்டக் கம்பனியும் முதலீட்டுச் சபையும் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தைக் கைச்சாத்திட்ட திகதியில் இருந்து சபையின் அனுமதியுடன் கருத்திட்டத்தை அமுலாக்கும் ஐந்து (5) வருடக் காலப்பகுதியொன்றின்போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்களின் மற்றும் கட்டிடப் பொருட்களின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவில் இருந்து விலக்களிக்கப்படும்.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம்

கருத்திட்டக் கம்பனியும் முதலீட்டுச் சபையும் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட திகதியில் இருந்து சபையின் அனுமதியுடன் கருத்திட்டத்தை அமுலாக்கும் ஐந்து (5) வருடக் காலப்பகுதியொன்றின்போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்களின் மற்றும் கட்டிடப் பொருட்களின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவில் இருந்து விலக்களிக்கப்படும்.

(உ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கத் தீர்வைச் சட்டம்

எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர கருத்திட்டம் சம்பந்தப்பட்டதாக இறக்குமதி செய்யப்படும் மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் தொடர்பில் சுங்க தீர்வை விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் கருத்திட்டக் கம்பனியும் முதலீட்டுச் சபையும் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட திகதியில் இருந்து சபையின் அனுமதியுடன் கருத்திட்டத்தை அமுலாக்கும் ஐந்து (5) வருடக் காலப்பகுதியொன்றின்போது எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஊ) மூலப்பொருட்களின் இறக்குமதி

மேற்சொல்லப்பட்ட ஆலைகளுக்கான மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவில் இருந்து விலக்களிப்பும் அத்துடன் சபையின் அனுமதியுடன் புதிய உருட்டு ஆலை வர்த்தகச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் அல்லது புதிய உருட்டு ஆலைக்கான முதலாவது இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்ட திகதியில் இருந்து, அவற்றில் எது பிந்தி வருகிறதோ, எட்டு (8) வருடக் காலப்பகுதியொன்று ஏதும் இறக்குமதிச் சுங்கத் தீர்வை இருப்பின் அதிலிருந்தும் விலக்களிப்பு அளிக்கப்படும்.

பசில் ரோஹன ராஜபக்ஷ, பா. உ.,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2011, மே 30.

06-219

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.